Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 03 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 18 (17.05.2006) புதன்கிழமை இதழ் 229

Dialog டயலொக்

100/-,400/-,1000/- விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டு பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

kit எந்நேரமும் உன்னுடன்....

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Sri Murugan
Tele Communication & Agency
Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P : 021 222 5392,
Fax : 021 222 3214
E.Mail : srimurugan@eureka.lk

# நாகர்கோவில் பகுதியில் நேற்று படையினர் - புலிகள் கடும் சமர்!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி கிழக்கு - நாகர்கோவில் பகுதியிலுள்ள முன்னரங்க நிலைப் பகுதிகளில் நேற்று மாலை படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் திடீர் மோதல் இடம்பெற்றது.

45 நிமிடங்கள் கடும் ஆட்லறித் தாக்குதல்களுடன் நடந்த நேரடி மோதலில் நான்கு படையினரும், இரண்டு விடுதலைப் புலிகளும் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டது.

நாகர்கோவிலுக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட கண்டல் காட்டுப் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் முன்னணி காவல் நிலை மீது நேற்று மாலை 5.45 மணியளவில் படையினர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

நாகர்கோவில் இராணுவ முகாமிலிருந்து சூனியப்பிரதேச மூடாக முன்னேறிய படையினரே கிரனேட் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் இரு போராளிகள் காயமடைந்ததையடுத்து இரு தரப்புக்குமிடையே அந்தப் பகுதியில் கடும் சண்டை வெடித் தது.

சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சண்டையில் நான்கு இராணுவத்தினர் படுகாயமுற்று பலாலி இராணுவ வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்த மோதலின் போது நாகர் கோவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் யுத்தம் வெடித்தால் பாரிய அழிவுகள் ஏற்படும்!

## டொனால்ட் காம்ப் எச்சரிக்கை



கொழும்பு —

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமாயின் அது பாரிய அழிவை ஏற்படுத்துமென அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் காம்ப் தெரிவித்தார்.


நேற்று கொழும்பில் அவர் தெரிவித்திருப்பதாவது -

இலங்கையில் மீண்டும் ஒரு ... பதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறுகின்ற படுகொலைகளுக்கு அரசாங்கம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.


தெற்காசிய நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்கு இலங்கையின் நிலைமைகள் குறித்து தெளிவாகத் தெரியும். நாம் இலங்கையின் தற்போ...

# படுகொலைகளை கண்டித்து கிளிநொச்சியில் பேரணி




கிளிநொச்சி —

அப்பாவிப் பொதுமக்களை இராணுவத்தினர் கொடூரமாக படுகொலை ... மாறும் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும் எனக் கோரி நேற்று கிளிநொச்சியில் கண்ட...



கொழும்பு


இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமாயின் அது பாரிய அழிவை ஏற்படுத்துமென அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் காம்ப் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் அவர் தெரிவித்திருப்பதாவது -

இலங்கையில் மீண்டும் ஒரு போர்ச் சூழல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறுகின்ற படுகொலைகளுக்கு அரசாங்கம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தெற்காசிய நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்கு இலங்கையின் நிலைமைகள் குறித்து தெளிவாகத் தெரியும். நாம் இலங்கயையின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்தியாவுடன் (8ஆம் பக்கம் பார்க்க)




கிளிநொச்சி

அப்பாவிப் பொது மக்களை இராணுவத்தினர் கொடூரமாக படுகொலை செய்து வருவதைக் கண்டித்தும்- திட்டமிட்ட படுகொலைகளை நிறுத்துமாறும் இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும் எனக் கோரி நேற்று கிளிநொச்சியில் கண்டனப்பேரணி நடைபெற்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் தாக்குதலில் போராளி உயிரிழப்பு!

வவுனியா

வவுனியா - சேமமடுவில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்!

### ஐ.நாவிடம் ஆயர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கில் நடைபெறும் படுகொலைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆகியோர் நேற்று மேற்படி வேண்டுகோளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திடம் விடுத்துள்ளனர்.

உள்நாட்டில் (8ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானையில் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

சங்கானை

சங்கானை சந்திப் பகுதியில் இராணுவ காவலரண் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் சங்கானை சந்திக்கு அருகிலிருந்த இராணுவ காவலரண் மீதே கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் - பொதுமக்களைக் கடுமையாகத் தாக்கியதுடன், ஐம்பதுக்கும் மேற்பட்ட பொது மக்களைக் கைதுசெய்து கடுமையான விசாரணைக்குட்படுத்திய பின்னர் விடுவித்ததாக (8ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தை அமுல்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

### தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

கிளிநொச்சி

போர்நிறுத்த உடன்படிக்கையை உரிய முறையில் அமுல்படுத்த அரசாங்கத்துக்கு ஊடகங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய தலைமையிலான ஐந்து ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை என்பது சர்வதேசம் ஏற்றுக் கொண்ட கௌரவமான ஆவணமாகும். எனவே, அதனை அமுல்படுத்துவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இதற்கு தென்னிலங்கை மக்கள் அழுத்தம் கொடுக்கவேண்டும். (8ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கண்காணிப்பு குறித்த கண்காணிப்பு குழுவின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை!

கொழும்பு

கடல் கண்காணிப்பு பணிகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்தது.

நேற்று போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் அதன் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தலைமையில் கொழும்பில் கூடி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டனர்.

வெற்றிலைக்கேணி தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கடல் கண்காணிப்புப் பணிகளிலிருந்து தாம் தற்காலிகமாக விலகுவதாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அறிவித்திருந்தனர்.

எனினும், அரசாங்கம் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு தாம் பாதுகாப்பு வழங்கத் தயாராக (8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர் விபரம்

யாழ்ப்பாணம் ——

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு கல்வியாண்டு 2005/2006 இற்கான புதிய அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுள்ளது.

இப்பட்டியலில் கலை, பௌதீக விஞ்ஞானம், சங்கீதம், நடனம் தவிர்ந்த ஏனைய கற்கை நெறிக்களுக்கான மாணவர்களின் பெயர்களே இடம் பெற்றுள்ளது.

மேற்படி அனுமதி பெற்ற மாணவர்கள் தமது கற்கைநெறி க்கான பதிவினை 30.05.2006 இற்கு முன்னர் யாழ். பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளுமாறு பல்கலைக் கழக மானியங்கள் அறிவித்துள்ளது.

கலை, பௌதீக விஞ்ஞானம், சங்கீதம், நடனம், ஆகிய கற்கை நெறிக்கான மாணவர்கள் பெயர்பட்டியல் இவ்வாரம் ப.மா. ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்படும்.

**மருத்துவத் துறை**

எம்.சரவணபவானந்தன், கே.நிருத்தன், ரி.சைஷானந்த், எஸ்.பாலச் சந்திரன், பி.சதானந்தசர்மா, வி.எ.கனிஷ்கா, வி.கார்த்திகா, வி.மஞ்சுதன், கே.தர்மலிங்கம், எஸ்.விஷ்ணுகுமார், எம்.எம்.நிரோசினி, என்.பிரதீபன், ரி.ஜெயராம், கே.வருணி, எ.திலீப்குமார், கே.தர்சனன், எஸ்.பேரின்பநாதன், கே.கோபிநாத், ஜே.பரமராஜா, ரி.ஹேமலதா, எ.ஜே.எ.அருள்சோதி, ஆர்.எம்.எம்.தீபன், ரி.மதீஸன், எம்.சிவசங்கர், எம்.தனுஜா, ஜே.கல்யாணி, ரி.திவாகர், பி.சத்தியரூபன், எம்.விஸ்ணுகாந், வை.பிரசன்னா, பி.சதீஸ், எஸ்.சுனந்தா, எ.அபிராமி, எம்.உமாநந்தினி, ஆர்.வித்தியா, ஜி.நிரோஜன், ரி.ஐங்கரன், ரி.சீவரட்ணம், கே.இளங்கோவேள், எஸ்.நித்தியரூபன், ஆர்.பவித்திரா, வி.இளங்குமரன், வை.சிவப்பிரகாசம், எ.துஸ்யந்தி, எஸ்.குமரன், எஸ்.பழனிவேல்பிள்ளை, வி.அசோதை, ஆர்.ஹேமபாலா, வை.திவ்யா, ரி.கோகுலன், எஸ்.சாரங்கன், வி.சுஜீவ், டி.சிவலிங்கம், ரி.தவரட்ணம், வி.பாக்கியநாதன், ரி.விமலகாந், ஜி.கார்த்திக், எஸ்.சிவசங்கரி, எம்.தர்மராஜா, எம்.நர்மதா, எஸ்.பிரபுசங்கர், வை.முரளிதரன், எஸ்.கிஷாந்தன், எஸ்.கிருஸாந்தன், எஸ்.கம்ஸன், எம். மணிவண்ணன், ஆர்.துவரதீபன், கே.உதயசீலன், எஸ்.பிரியதர்ஷினி, வி.பவித்திரா, எஸ்.வசீகரி, எஸ்.சிறிசுபாகரன், ஏ.சி.அருள்நேசன், டபுள்யு.ஜேதயானி.

**உயிரியல் விஞ்ஞானத்துறை**

என்.பரராஜசிங்கம், எ.மாணிக்கவாசகர், ஜே.மேனகா, ஜே.நவரட்ணம், என்.மகாதேவன், ஏ.என்.ஆர்.ரமணன், எ.சிவதாசன், எஸ்.வசீதரன், எம்.தனுஷன், எம்.பிரதீஸ், கே.ராஜேந்திரன், ஜே.எஸ்.மரியதாஸ், எஸ்.ஜெயசத்தி, எஸ்.அம்பிகை, எஸ்.டினோஜ், ரி.ரஜிந்தன், ரி.காயத்திரி, எம்.சிவேந்திரன், எஸ்.கிருபாநந்தகுமரன், ரி.சுதர்சினி, எம்.பிரார்த்தனா, வி.வஜேந்த், எஸ்.மகேஸ்வரன், கே.சின்னராசா, எ.தெய்வேந்திரன், ஜி.குபேரன், எல்.அழகதுரை, ரி.சற்குணநாதன், கே.கௌசிகா, எ.நந்தகுமார், எஸ்.இராமநாதன், எஸ்.வி.ஜ.ஜே.எம்.நிர்மலின், ரி.சிவராஜா, எஸ்.சசிகரன், என்.ஐங்கரேசன், எஸ்.கலைவாணி, எ.பவித்திரன், எஸ்.மேரி, எஸ்.ரம்யா, ரி.வாகீஸன், எஸ்.வினோஜா, ஜே.ஜெனிற்றன், யு.சிவபரம் சோதி, எ.ஐங்கரன், எ.பகீரதன், எஸ்.மதன ராஜா, ஆர்.ஆர்.ரமேஸ், கே.கிரிஷாளினி, எஸ்.வி.றெவல், வை.ஹேமச் சந்திரன், எ.எம்.எஸ்.குறூஸ், எஸ். பிரதீபன், வை.கௌரிநேசன், எஸ். ராஜகரன், எஸ்.சுரேந்திரன், கே. சிறீஸ்கந்தராஜா,

**விவசாயப் பீடத்துறை**

ரி.கபிலன் , எம்.கைலாயன் கிறிச்செல்வம், எம்.பேரம்பலன், பி.கலைமாறன், எஸ்.தங்கராஜ், எம்.டெசித்தா, ரி.ஜெய்சுந்தர், யு.கெங்காதரன், எஸ்.அம்பிகா, எஸ்.ரிஸந்தன், எம்.பிரியதர்ஷினி, எஸ்.கார்த்திகா, ரி.கதிரவேல், எஸ்.பிரியந்தி, ஆர்.கார்ஜின், ஜெ.தவராஜ், ஜி.கணேசமூர்த்தி, கே.ராஜகாந்தன், ரி.ஜோசெப்குமார், என்.அரவிந்தன், கே.ஜானகி, வி.உமாஜினி, ஏ.வரோதயன், ஈ.நாகராசா, டி.எம்.மதனன், எம்.எம்.சந்தியா, எஸ்.சந்திரிகா, என்.வாகீசன், என்.தேவகுமார், கே.கார்த்திகா, ஆர்.அர்ச்சுணா, ஜே.என்.பி.அமலரூபன், கே.நிஷா, எம்.வரூதயன், கே.ராஜேந்திரன், ரி.டி.கே.தயாபரராஜ், டி.சி.அரவிந்தராஜ், எஸ்.நவரட்ணம், பி.மேனுஜா, ஜி.பஞ்சகரன், பி.சுசானா, கே.ஜெயவாணன், எம்.முருகதாஸன், ரி.ஜெயதர்சன் எஸ்.நாகரட்ணம், வி.நிரூபன், ரி.பிரவீணா ஏ.மகாதேவன், கே.சசிமாறன், வி.விஜயராஜ், எம்.தர்சினி, எஸ்.சத்தியானந்தன், எம்.ஏ.தர்மலிங்கம், எம்.ஜெயசுதன், கே.விக்னேஸ்வர மூர்த்தி, எஸ்.பிரசாத், பி.லோகநாதன், எம். செல்லையா, எப்.செர்லிணமேரி, எம்.உஷாகரன், எம்.முகுந்தன், கே.சுஜித்தா, என்.லயந்தினி, வி.நிரூஷா, பி. ஆர். பி.பெர்னாண்டோ.

**சட்டத் துறைக்கு**

எம்.என்பி.ஜெய ராஜ்ச், ஜே.வி.ஏ.ரஞ்சித் குமார், சி.என்.பர்னாந்து, வை.யோகரட்ணம், எஸ்.சுகன்ஜா, எம்.சிறில்ராஜ்ச், வி.சாரங்கன், வி.சண்முகநாதன், பி.உமாகாந்தன், எம்.தர்மராஸ், ரி.சாமலை, பி.இலோர்நாயகம், கே.உதயலதா, ஏ.கோசலரூபினி.

**சித்திரமும் வடிவமைப்பும்**

ஏ.எம்.எம்.முபித், ஜே.சிவகுமார், ரி.கிருஸ்ணகுமார், கே.கலா மேகன், கே.ஜெயசீலன், ஜே.எம். மகேஸ், ஆர்.திலீபன், எம்.றெஜினோபன், ஜே.சொகைபூ, கே.சிறிகாந்த், எம்.ஜெயமாலன், ஆர்.ராஜ்கு[illegible] கே.நிமலதீபன், எஸ்.ராகுலன், எம்.தமீரா, பி.ஜெயதீபன், கே.விக்னேஸ்வரன், என்.திஸானா, ஆர். சிவராம், ஏ.உதயகுமார், வி.வசந்தரூபன், கே.நிசாந்தன், வி.கலைச்செல்வன், பி.நிறஞ்சன்.

**வர்த்தகத்துறை**

ரி.சுதர்சினி, எம்.சுமன், ரி.விதுசா, கே.ராஜேந்திரன், எஸ்.பாலச்சந்திரன், ஜே.ஏ.நிரேஷ், கே.பிரகலாதன், எஸ்.கிருத்திகா, கே.திருச்செல்வம், ஏ.சஞ்சீவ், கே.கிரிஜா, ரி.சர்மிளா, ஆர்.மேனகா, ஆர்.புவீந்திரன், பி.யோகநாதன், பி.குகநேசன், எம்.அனுஜா, ரி.நிசாந்தன், எஸ்.ஸ்ரீரங்கன், ரி.டி.ராமசாமி, ஆர்.ஜனனி, கே.சுகந்தராஜ், ஆர்.நிரூபன், எஸ்.சுந்தரலிங்கம், வி.கோபிமுகுந்தன், கே.அன்னலிங்கம், எஸ்.வினோதன், ரி.எஸ்.குமார்.

**சித்தமருத்துவம்**

ஆர்.உமாபிரியதர்சினி, எம்.சுதர்சன், எஸ்.சிந்துஜா, ஜி.தர்சினி, பி.தட்சாயினி, எஸ்.தேவதர்சிகா, எம்.நிவேதினி, எம்.ராஜீவ் வசந்தன், ரி.பொன்னையா, எஸ். தனராஜி, கே.அபர்ணா, எஸ்.சிவதர்சினி, எம்.ஈ.எவ்.சில்மிஜா, ரி.குணரத்தினம், எஸ்.ஜனகன், பி.பிரதீபன், எஸ்.சிவதாசன், எஸ்.சுகன்யா, ஆர்.கைலாயலிங்கம், என்.கஜித்ரா, பி.நிஷாந்தி, எஸ்.தனுசிகா, ஏ.குமுதா, எம்.எஸ்.எம்.ஷர்மன், எஸ்.அசோக், ஆர்.நிஷான், எஸ்.ஹரிசங்கர், எஸ்.நிலுஷ்ஷி, கே.பிரதீப், கே.சங்கீதா, பி.பிரசாத், பி.கலைமதி, ரி.சக்திவேல், வி.தனேஷ்குமார், யூ.திலீபன், வி.சரவணபவன், கே.பொற்கொடி, ஏ.எழில்நிலா, ஜே.தணிகாசலம், ஏ.எல்.எம்.சப்ராஸ், ஜே.பகீரதன், சி.கிஷாந், எம்.எம்.ஏ.அலி, பி.சிந்துதாரணி, கே.குருநாதபிள்ளை, ஏ.மலரிணி, சி.எஸ்.தேவேந்திரன், ஜி.தவசீலன், எ.மயூரன்.

**முகாமைத்துவம்**

என்.சிறிஸ்கந்தராஜா, ஆர்.சிவதாசன், ஆர்.றமேஸ், ரி.மலைமகன், எல்.நீருஸா, ரி.சுரேசன், கே.கிரிதரன், எஸ்.கேமமாலினி, எ.ஆறுமுகம், எஸ்.சுகன்ஜா, ஜி.ராஜசேகரம், எம்.சரத்குமார், எஸ்.துளசிகா, கே.பிரதீபன், எஸ்.கிருஸ்னசந்திரன், எஸ்.பரமேஸ்வரி, வி.வேலாயுதபிள்ளை, ரி.வடிவேல், வி.தேவரதன், கே.ஏ.நிரோஜினி, என்.மயூரன், ஆர்.வித்தியா, எ.மயூரதன், என்.லோகிதா, எஸ்.சோபிதன், ரி.ரகுணன், ஆர்.ஜனன், வி.ஆரணி, ஆர்.பார்த்தீபன், எம்.மயூரா, எம்.ராகவன், எ.சயந்தன், கே.சர்மிளா, ரி.குருபரன், ஆர்.செல்வச்சந்திரன், எஸ்.விஜயகுமார், கே.சிவானந்தம், ரி.சுகேஸ், கே.கௌரீசன், கே.தர்மரட்ணம், கே.சுஜீவன், ரி.ஜெகதீஸ், எஸ்.ஜமுனா, எம்.சொரூபினி, கே.விஜயமதன், வி.சாளினி, ஆர். கரீந்திரன், எம்.காந்திதிலகர், ரி.திருமாலினி, எஸ்.கஜன், கே.எல்.லியன், என்.மகேந்திரலிங்கம், எ.ஜெகந்தன், எ.வித்தியாசாகரன், ஈ.லோகரூபன், எஸ்.சிறிஸ்கந்தராசா, சி.சிவப்பிரகாஸ், ஆர்.வாமதேவன், ரி.சிவகணேஸ், எல்.மயூரன், எ.விக்கினேஸ்வரன், கே.சோதிநாதன், ஆர்.டிசாந்தன், என்.றாம்கோபால், சி.சி.வினித்திரா, ரி.கந்தசாமி, வை.பிரேம்நாத், ஆர்.ஆறுமுகம், சி.சிவதர்சன், ஜெ.உதயதர்சிகா, பி.மனோராஜ், ரி.தனுஷா, எ.அனுஸ்ரா, எஸ்.லக்ஷ்மிகாந்தன், ரி.நிசாந்தன், வி.மகாலிங்கம், என்.அம்பிகாபதி, எல்.பத்மநாதன், எஸ்.ஆர்.சுமித்திரன், பி.கணேசர், எஸ்.சிவசோதி, ஆர்.நேருஜா, எஸ்.வளர்மதி, கே.மயூரதன், எ.திலிப்காந்தன், கே.பிரதீபா, என்.பிரசன்னா, எஸ்.ரட்ணசிங்கம், ரி.சுகந்தினி, ஜெ.நிமலராஜ், எஸ்.காண்டீபன், எஸ்.கலைவாணி, எஸ்.கம்சிகா, எஸ்.சபேசன், எம்.சி.ரம்சீன், என்.சிவமணி, கே.சிவகுமார், கே.சுரேஸ்குமார், வி.செந்தூரன், ரி.அனுஜன், டி.சூரியகுமார், எ.பிரதாப், எம்.விஜிதன், ஆர்.பார்த்தீபன், ஜீ.பிரதீபன், கே.கதிர்ச்செல்வன், எஸ்.கஜவதனன், எஸ்.வசீகரன், எல்.எம்.ஆர்.பீரிஸ், எஸ்.சுபாஜினி, ஆர்.ஆரோக்கியநாதர், எஸ்.சுதர்சன், ஆர்.திரவியநாயகம், ஜே.நிரஞ்ஜனா, எஸ்.சிவராஜா, எஸ்.லலிதசக்தி, வி.பாலகுமரன், எ.ஆர்.எல்.சி. றெவின்.

# மிலேச்சத்தனமான படுகொலைகள் தொடர்வதைப் பொறுக்க முடியாது

## கோப்பாய் பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம் ——

மிலேச்சத்தனமான படுகொலைகள் குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாது - எனக் கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வலி கிழக்கின் பல பகுதிகளிலும் இரண்டு நாட்களில் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி இளைஞர்களின் எண்ணிக்கை ஐந்தாகவும், தீவகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்குபேர் உட்பட பதின்மூன்று பேரும் (இரண்டு வயதுக் குழந்தைகள் இருவர்) சிங்களக் காடையர் கும்பல்களாலும், அரசின் கைக்கூலிகளாக இயங்கும் துரோகக் கும்பலும் இணைந்து நடத்திவரும் இனவெறியாட்டத்தின் உச்சக்கட்டம் தீவகத்தில் மையம் கொண்டுள்ளது. மகிந்த சிந்தனையில் உதித்த ஏவல் பேய்களின் அப்பாவிகள் படுகொலைப் படலத்தில் விவசாயி, கடலை வியாபாரி, வர்த்தகர், வழிபாட்டுக்குச் செல்வோர், ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளோர் எனக் கொலைப்பட்டியல் நீண்டு செல்கிறது.

படைகள் தாக்கப்பட்டால் அதற்கு பதிலாக அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்யும் போர் விதி இலங்கையில் உண்டு என்பதை இவ்வாறான கொலைச் சம்பவங்கள் படைகளின் கோழைத் தனத்தையும் இயலாமையையும் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்தப் படுகொலைகளைச் சர்வதேசம் அறியாதவை அல்ல. சிங்கள அரசு படுகொலைகளை மூடி மறைத்தும்வரும் வேளையில் அதனை தமது ஊது குழல்கள் ஊடாக மக்களின் காது களில் பூச்சூடுவது போல் தாம் அதற்குக் கண்டன அறிக்கை வெளியிடுவதாகவும் கூறிவருகிறது.

இவ்வாறான படுகொலைகளாலும், மிலேச்சத்தனமான தாக்குதல்களும் நாளுக்கு நாள் அதிகரத்துச் செல்கிறது. இதனைப் பொறுத்திருந்து பார்க்கவோ அல்லது அழிந்து போவதோ தமிழனின் மரபில் இல்லாத செயல்.


எனவே தான் நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு தமிழர்களின் இறைமையையும், இனத்தின் தன்மானத்தையும் நிலைநாட்டுவோம். சாவுகளும், அழிவுகளும் சிங்களப் பேரினவாதிகளால் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போது நாம் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். போரை வலிந்து எமது இனம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆரம்பகாலகட்டத்தில் நாம் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டதும், தமிழர்களை கண்டால் கண்டதுண்டமாக வெட்டினர், சுட்டுக் கொன்றனர், கொதிக்கும் தார்ப்பீப்பாவுக்குள் வயது வேறுபாடின்றி தூக்கிப் போட்டுக் கொன்றனர்.

இதனைக் கண்டு பொறுக்க முடியாது. எமது இனத்தைக் காக்கும் நோக்குடனேயே போராட்டம் ஆரம்பித்தது.

அதன் பின் பேச்சுவார்த் தையும் நடந்தேறிய காலத்தில் சாவுகளும், அவலமும் தொடர்ந்தது. தற்போது பேச்சளவில் சமாதானமும் செயலளவில் போரும் நடைபெறு கிறது. ஆரம்ப காலம் போன்று வெட்டிப் போடுவதும், படுகொலை செய்வதும் ஆரம்பித்துள்ளது.

எனவே இதற்கான தீர்வை நாம் விரைவாக வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



மயிலை மைந்தன்

மரியரட்ணம் குணரட்ணம்

மலர்வு 04.08.1981 உதிர்வு 17.05.2004

குணம் என்னும் குன்றேறி
உறவுகள் வாழ்த்த அன்று
பொறியியல் பீடம் நோக்கி
பேராதனை வளாகம் சென்றாய்.
என்றுவரும் இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு
பட்டம் பெற்று வந்து எம்மை
பரவசப்படுத்துவாய் என்று
கற்பனையில் மூழ்கி நின்றோம்.
விந்தையான உலகமது நியதிதனை
விளக்கியே நீ கர்த்தரிடம் சென்றுவிட்டாய்.
இப்புவியிலுள்ளவரை உன் நினைவு மாறாதையா.
கர்த்தருக்குள் உன்ஆன்மா சங்கமிக்க
வேண்டுகிறோம்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

[2272]

யாழ்ப்பாணம் மனோகரா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
S.J.சூர்யா - நயன்தாரா
நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# விடுதலைப் புலிகளின் கடல் இறைமையை ஏற்க முடியாதென அரசு மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் கடல் இறைமை உரிமையை ஏற்க முடியாதென அரசாங்கம் மீண்டும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அரச சமாதான செயலகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இராணுவ சமநிலையில் இரு தரப்பு போர் நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தால் - அரசுக்கும், அரச சார்பற்ற சக்திகளுக்கும் இடையே நடத்தப்படும் பேச்சுக்கள் உள்ளிட்ட எந்தப் பேச்சுவார்த்தையும் இரு தரப்பும் மதிப்பளிப்பது என்ற அடிப்படையில்தான் நடத்தப்படுகின்றன.

இதுவே நோர்வே அனுசரணையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அனைத்து உயர்நிலைப் பேச்சுக்களிலும் அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அது தொடரும்.

போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்தக் கருத்தானது அந்த ஒப்பந்தம் குறைபாடுள்ளது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

கடற்பிரதேசங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ளவை. அரச சார்பற்ற சக்திகள் கட்டுப்படுத்தி வைக்க முடியாது என்று கண்காணிப்புக் குழு தெரிவித்திருப்பதை நாம் ஏற்கிறோம். ஆகையால் இது மிக மிகப் பாரதூரமான போர் நிறுத்த மீறலாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் கடற்படைக்கு சர்வதேச விதிகளின் படியோ இலங்கையின் யாப்பின் கீழோ எந்தவித சட்டபூர்வ அங்கீகாரமும் இல்லை. இத்தகைய கடற்படையானது - சர்வதேச சமூகத்தால் எங்குமே அங்கீகரிக்கப்பட்டதும் இல்லை.

சர்வதேச விதிகளின்படி இத்தகைய இறைமை உரிமையானது - அரசுக்கு மட்டுமே உண்டு. அரசுக்கான இந்த உரிமையை ஒருதலைப்பட்சமாக உரிமை கோருவதன் மூலம் வழங்க முடியாது.

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தமானது - இரு அம்சங்களைக் கொண்டது. போர் நடவடிக்கைகளைக் கைவிடவும் இறுதித் தீர்வு காண்பதற்கான அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ளும் சூழலை உருவாக்கவும் ஏற்படுத்தப்பட்டது.

ஐக்கிய கட்டமைப்புக்குள் எந்த வகையிலும் இலங்கையின் இறையாண்மையை, பிரதேச ஒற்றுமையை மீறாத - பிளவுபடாத இலங்கைக்குள்ளான இறுதித் தீர்வையே அது வலியுறுத்துகிறது.

இரு சமதரப்பு என்றோ இராணுவச் சமநிலையின் அடிப்படையில் என்றோ குறிப்பிடப்படவில்லை என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தரப் பரீட்சை நடத்த விடுதலைப் புலிகள் அனுமதி

## பரீட்சை ஆணையாளர் தகவல்

கொழும்பு—

உயர்தரப் பரீட்சையை வடக்கு - கிழக்கில் நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி அளித்துள்ளதாகப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கோரியிருந்தோம். விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இது தொடர்பான அனுமதியை அளித்துள்ளனர்.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஜூன் 15 ஆம் திகதிவரை 1811 நிலையங்களில் நடைபெறவுள்ளது எனத் தெரிவித்தார்.

# நோர்வேக்கு ஜூன் 10 இல் மங்கள சமரவீர பயணம்

கொழும்பு—



நோர்வேக்கு ஜூன் 10 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பயணம் மேற்கொள்கிறார்.

அவருடன் ஆனந்த சங்கரி மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகியோரும் உடன் செல்லவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தீவகப் படுகொலை குறித்து விசாரிப்பதற்கு குழு அமைப்பு



கொழும்பு—

தீவகத்தில் 13 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக 35 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களது கைரேகைகள் பதிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைக்கு வருமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும்,

முதன்மை விசாரணைகள் முடியும் நிலையில் குற்றப் பிரிவு பொலிஸாரிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்படும் என்றும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

# புதிய இங்கிலாந்து தூதுவர் ஜனாதிபதி மகிந்தவுடன் பேச்சு

கொழும்பு—

இலங்கைக்கான புதிய இங்கிலாந்துத் தூதுவர் டொமினிக் சில்காட் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அவர் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

இலங்கையில் அந்நிய சக்திகள் அமைதியை உருவாக்க முடியாது. ஆனால், அமைதிக்கான சூழ்நிலையை உருவாக்க வெளியிலிருந்து செயற்படும் சக்திகள் உதவமுடியும்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு வன்முறை தீர்வாகாது. இராணுவ வழித் தீர்வே சரியென்று வாதிடுபவர்கள் 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கவேண்டும்.

பெரும்பான்மையான இலங்கையர் போரை விரும்புகிறார்கள் என்பதை என்னால் நம்பமுடியாது.

இராணுவத் தளபதி மீதான தாக்குதல் மற்றும் யாழ்.உதயன் அலுவலகம் மீதான தாக்குதல் போன்ற வன்முறை மற்றும் பயங்கரவாதச் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அமைதி முயற்சிகளைக் கட்டியெழுப்பக் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டையும் இங்கிலாந்து செய்துள்ளது.

இங்கிலாந்துக்கான விசாக்களை 24 மணி நேரத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தூதரகத்தில் மேற்கொள்ளப்படும். இங்கிலாந்திலுள்ள இலங்கையரின் சட்டவிரோதக் குடியேற்றங்களைத் தடுக்கவும், தூதரகத்தினர் இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து நாடுகளின் இராணுவ வல்லுநர்கள் இணைந்து செயற்படுவர்.

சுனாமிக்கு முன்பாக இலங்கைக்கு வருகைதரும் இங்கிலாந்து நாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. அண்மைக் காலத்தில் அது குறைந்துள்ளது. இலங்கைக்குச் செல்லவேண்டாம் என்று எமது நாட்டவரை நாம் கேட்டுக் கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை - மூதூரில் இருந்து 3000 முஸ்லிம்கள் இடம்பெயர்வு

கொழும்பு—

மூதூரில் இராணுவ முகாம் அருகாமையில் உள்ள அகதிகள் முகாமில் நடந்த படுகொலைகளையடுத்து மூவாயிரம் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மூதூர் - கந்தளாய் வீதியில் ஜின்னா நகர் மற்றும் ஆசாத் நகரிலிருந்து அனைவரும் வெளியேறி உள்ளதாகச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அப்பகுதியில் நிலைமைகள் மோசமடைந்திருப்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு



செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை நேற்றுமுன்தினம் இரவு ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# பொலிஸ்சீருடை மாதிரியை அணிந்து கொழும்பில் தாக்குதலுக்குத் திட்டம்!

கொழும்பு—

பொலிஸாரின் சீருடைகள் போன்று ஆடைகளை அணிந்தும் பொலிஸ் என அடையாளமிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தியும் கொழும்பிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தலாமெனப் புலனாய்வுப் பிரிவு, படை அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளது.

எனவே, பொலிஸ் என அடையாளமிடப்பட்டு செல்லும் வாகனங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பொலிஸ் என அடையாளமிட்டப்பட் வாகனங்கள், பாதுகாப்புத் தலைமையகம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்நிலையம் உட்பட பொருளாதார கேந்திரநிலையங்களுக்குள் நுழையலாமெனவும், பொலிஸ் தலைமையகம் அந்தப் பிரிவுகளுக்கும் தெரிவித்துள்ளது.

பொலிஸ் என குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களில், ஆயுதங்கள் கடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்களை புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்ததாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# ஊர்காவற் படைக்கு மேலும் ஐயாயிரம் பேரை திரட்டமுடிவு

கொழும்பு—

தற்போதைய பாதுகாப்பு நிலைமையைக் கவனத்திலெடுத்து எல்லையோரக் கிராமங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஊர்காவற்படையில் புதிதாக ஐயாயிரம் பேரை இணைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல எல்லையோரக் கிராமங்களிலிருந்தும் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. திருகோணமலை, கந்தளாய், அநுராதபுரம், பொலநறுவ, அம்பாறை, வவுனியா ஆகிய பொலிஸ் பிரிவுக்குள் அடங்கும் இடங்களில் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளதாக ஊர்காவற் படையின் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நளின் இலங்கைக்கோன் தெரிவித்தார்.

தற்போது ஊர்காவற்படையில் 21 ஆயிரம் பேர் வரை உள்ளனர். புதிதாக ஆட்சேர்ப்பு முடிவடைந்த பின்னர், ஊர்காவற்துறைப் படையின் தொகை 27 ஆயிரமாக உயரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# மட்டக்குளி தேடுதலில் இருவர் கைது

கொழும்பு—

மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இருவர் கைது செய்யப்பட்டனர். பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். அதிகாலை 5 மணி முதல் காலை 9 மணிவரை மேற்கொள்ளப்பட்ட இந்த தேடுதலில் படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டனர். இதில் கைது செய்யப்பட்ட ஒருவர் தமிழர் எனவும், மற்றையவர் சிங்களவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே தேடுதல் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததாகப் பொது மக்கள் தெரிவித்தனர். இந்த தேடுதலின் போது வீடுகளும் பரிசோதிக்கப்பட்டதுடன், ஆள் அடையாளங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான இடங்கள் பல கூடுதல் நேரம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

# மலையகப் பகுதி வாகனங்களை புலிகள் பயன்படுத்துகின்றனராம்!

கொழும்பு—

மலையகப் பகுதிக்குள் சந்தேகம் ஏற்படாத வகையில் செல்வதற்கு விடுதலைப் புலிகள் மலையகப் பகுதியில் கொள்வனவு செய்த வாகனங்களைப் பயன்படுத்துவதாகப் படைத்தரப்பினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக கொழும்புத் தகவல் தெரிவித்தது.

பசறை, நமுனுகல, பதுளை ஆகிய ·ிரதேசங்களில் விலைக்கு வாங்கப்பட்ட 8 ஓட்டோக்களை கிழக்கு மாகாணத்திலிருந்து மலையகத்துக்கு தமது உறுப்பினர்களின் பயணத்துக்காக விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த ஓட்டோக்களில் ஊவா மாகாணமெனக் குறிப்பிடப்படும் (யு.பி) என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதால், படையினரின் வீதித் தடைச் சோதனையின்போது சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டாதென்பது புலிகளின் நம்பிக்கையாகவுள்ளது.

விலைக்கு வாங்கப்பட்ட வாகனங்களை செலுத்துவதற்கும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். மலையகத்திலிருந்து கிழக்கு மாகாணம் சென்று, விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்ற இளைஞர்கள், யுவதிகள் குழு தற்போது மலையகம் திரும்பியுள்ளதாகவும் படைத்தரப்புக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# எரிபொருள் விலையை மீண்டும் அதிகரிக்க வேண்டி ஏற்படும்

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு



கொழும்பு—

எரிபொருள் விலைகளை மீண்டும் அதிகரிக்க வேண்டிய நிலையேற்படுமென பெற்றோலிய அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி தெரிவித்தார்.

கண்டி பேராதனையிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைகளை நேற்று முன்தினம் பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில் - பெற்றோலியப் பொருட்களை நாடளாவிய ரீதியில் விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்காக நாளாந்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2 மில்லியன் ரூபா நஷ்டத்தை எதிர்நோக்குகிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய திறை சேரி முன்வராத பட்சத்தில் எரிபொருள் விலைகளை அதிகரிக்க நேரிடும் எனத் தெரிவித்தார்.

# படுகொலைகளின் எதிர்வினையை அரசாங்கம் விரைவில் உணரும்!

## காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



கிளிநொச்சி—

தமிழ் மக்கள் மீதான கொலை வெறிப்படுகொலைகளின் எதிர்வினையை அரசாங்கம் விரைவில் உணரும் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறியுள்ளதாவது -

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாதக் கொள்கையுடன் இராணுவ ரீதியிலான தீர்வை எட்டுவதற்கே முயற்சி செய்கின்றார்.

கடந்த தேர்தல் மூலம் ஆட்சியை தனதாக்க சிங்களப் பேரினவாதக் கொளகைகளைக் கொண்ட கட்சிகளுடன் உடன்பாடுகளை எட்டி, பேரினவாதக் கொள்கைகளையே தனது தேர்தல் கருவாகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக அமைச்சர்களையும், இராணுவத்தலைமைப் பீட அதிகாரிகளையும் கடும் போக்குக் கொண்டவர்களாகவே நியமித்திருந்தார்.

அதுபோலவே ஜெனீவாப் பேச்சுக்களின் போது கூட ஆலோசகராக முக்கிய கடும் இனவாதப் போக்குக் கொண்டவர்களில் ஒருவரான எச்.எல்.டி.சில்வா நியமிக்கப்பட்டிருந்தார்.

ஜெனிவாப் பேச்சுகள் நிறைவு பெற்று, விமான நிலையம் திரும்பிய உடனேயே பேச்சில் எட்டப்பட்ட விடயங்களுக்கெதிரான கருத்துக்களை பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்த அரச தரப்பினர் வெளியிடத் தொடங்கினர்.

ஜெனிவாவில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலேயே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தொடக்கம் முதல் ஈடுபட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டும் நோக்கில் தமிழின அழிப்பு நடவடிக்கையை அரச படைகள் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் போரைத் தொடங்குவார்கள் என்றும், அதனை சர்வதேசத்தின்முன் வெளிப்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளே போரைத் தொடங்கிவிட்டனர் என்றும் கூறுவதற்கு மகிந்த ராஜபக்ஷ கனவு காண்கிறார்.

சர்வதேச ரீதியாகப் பல்வேறு விடுதலைப் போராட்டங்களுக்குத் தீர்வுகள் எட்டப்பட்டு வரும் நிலையில், மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கொள்கையை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளாது.

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்தில் தமிழ் மக்களை எவரும் மிரட்டிப் பணிய வைக்க முடியாது.

எதிர்வரும் காலங்கள் தமிழினத்திடம் இருந்தும், சர்வதேசத்திடம் இருந்தும் சிங்களப் பேரினவாதிகள் புதிய பாடங்களைக் கற்றுக் கொள்ளும் காலமாக அமையவுள்ளது. மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை இராணுவ பலத்தால் ஒருபோதும் வெல்ல முடியாது.

தற்போது தமிழர் பிரதேசங்களில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொலை வெறிப்படு கொலைகள் தமிழ் மக்களைப் பெரும் கொதி நிலைக்குத் தள்ளியுள்ளது.

இதன் பிரதிபலிப்பை இராணுவமும், அரசியல் தலைமைகளும் வெகுவிரைவில் உணர்ந்து கொள்வார்கள். தமிழ் மக்களின் உள்ளக் குமுறல் பூகம்பமாக வெடிக்கும் போது பேரினவாதிகள் சரியான பாடத்தைப் படிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டுப்பற்றாளர் நாவண்ணனின் நினைவு வணக்க நிகழ்வு!

கிளிநொச்சி—

நாட்டுப்பற்றாளர் கவிஞர் நாவண்ணனின் நினைவு வணக்க நிகழ்வு முல்லைத்தீவு நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

ஓவியர் ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சசி ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீப் ஏற்றினார்.

திருவுருவப்படத்துக்கான ஈகைச் சுடரை திரைப்பட உருவாக்கல் பிரிவுப் பொறுப்பாளர் சங்கர், நுண்கலைக் கல்லூரி ஆசிரியர் சங்கீத பூசணம் கமலகுமாரன் சாந்தகுமாரி மற்றும் சகிலா ஆகியோர் ஏற்றினர்.

மலர்மாலையை நுண்கலைக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீகுகன் அணிவித்தார்.

நிகழ்வின் நினைவுரைகளை நுண்கலைக்கல்லூரிகளின் பணிப்பாளர் தணிகைமாறன், வித்தியானந்தாக்கல்லூரி ஆசிரியர் சு.லோஜி, நுண்கலைக்கல்லூரி முதல்வர் மணிமொழி கிருபாகரன் மற்றும் சங்கர் ஆகியோர் நிகழ்த்தினர். (கு)

# டொக்டர் முருகானந்தனைப் பின்பற்றி வைத்தியர்கள் சேவைசெய்ய வேண்டும்

## பிரியாவிடை நிகழ்வில் அரச அதிபர் இராசநாயகம்

வட்டக்கச்சி—

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பின்தங்கிய பிரதேச மக்களுக்காக பணிபுரிந்தவர் டொக்டர். ச.முருகானந்தன். இவரின் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய வைத்தியர்களும் சேவையாற்ற முன்வர வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.


அக்கராயன் -வன்னேரிக்குளம் மத்திய மருந்தகத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி ஓய்வுபெற்ற டொக்டர் ச.முருகானந்தனுக்கு கடந்த வாரம் வன்னேரிக்குளம் கிராம மக்கள் அளித்த பிரியாவிடை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -

டொக்டர் முருகானந்தன் தனது மருத்துவ சேவைக்கப்பால் எழுத்துப் பணியையும், சமூகப் பணியையும் மேற்கொண்டு வருபவர். கடந்த 25 வருடகால தனது சேவையை அவர் அடிப்படை வசதிகள் குன்றிய பின்தங்கிய பிரதேச மக்களுக்காக மேற்கொண்டு வந்தமை போற்றப்படக் கூடிய விடயமெனத் தெரிவித்தார்.

வன்னேரிக்குளம் ஊரக மேம்பாட்டுத் தலைவர் நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அரச அதிபர் தி.இராசநாயகம், டொக்டர்.முருகானந்தனுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி விருதி வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் முதியோர் இல்லத் தலைவர் பொன்.நித்தியானந்தம், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தமிழ்வாணன், கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ். கணேசபிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (09)



வன்னேரிக்குளம் வைத்தியசாலையில் கால்நூற்றாண்டு காலமாக வைத்திய சேவையாற்றி ஓய்வுபெறும் டொக்டர். ச.முருகானந்தனுக்கான சேவைநலன் பாராட்டும், பிரிவுபசார விழாவும் கடந்த 6 ஆம் திகதி வன்னேரிக்குளம் பொது அமைப்புகளின் இணையத் தலைவர் பா.நடேசலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. இதில் விழா நாயகன் பதில் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

படம் - கு.கிருஷ்ணா.

# நான்கு மாணவர்கள் 10 ஏ பெற்றமை சகலரதும் உழைப்பின் வெளிப்பாடே!

## முல்லை வலய கல்விப் பணிப்பாளர் புகழாரம்

முல்லைத்தீவு—

வளப்பற்றாக்குறை இருந்த போதிலும் முல்லை கல்வி வலயத்தில் க.பொ. த(சா/த) பரீட்சையில் ஒரே பாடசாலையிலிருந்து நான்கு மாணவர்கள் 10 ஏ எடுத்துள்ளமையானது மாணவர்களினதும், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்களினதும் அயராத உழைப்பின் வெளிப்பாடேயாகுமென முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் புகழாரம் சூட்டினார்.

இலங்கை வங்கியின் முல்லைக் கிளையினர் கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்த முல்லை, வலயப் பாடசாலைகளில் 10ஏ, 9ஏ எடுத்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் முல்லைக் கிளை முகாமையாளர் இலட்சுமண சர்மா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - இலங்கை வங்கியைச் சேர்ந்த சிறிபாலேஸ்வரன், முல்லை. வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரட்ணம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சி.சுப்பிரமணியேஸ்வரன், புதுக்குடியிருப்பு கோட்ட கல்வி அதிகாரி ஜி. எஸ்.பரமேஸ்வரன், முல்லை.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், மாவட்ட முகாமையாளர் திருச்செல்வம் ஆகியோர் மாணவர்களைப் பாராட்டி உரையாற்றியதைத் தொடர்ந்து, கலந்துகொண்ட அதிகாரிகளால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரி மாவர்கள் நான்குபேர் 10 ஏ பெற்று பாடசாலைக்கு பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (09)

# பூநகரியில் சிகிச்சையளிப்பு

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகள் நடமாடும் சுகாதாரப் பிரிவினர் கடந்த 13 ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்தில் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

இதில் பற்சிகிச்சை, பொதுமருத்துவம், கண்பரிசோதனை, காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல், கண்காட்சி என்பனவும் நடைபெற்றன. இதில் பெருமளவானோர் பங்குபற்றிச் சிகிச்சை பெற்றனர்.

# தலைமன்னார் கடலில் 13 தமிழர்கள் கைது!

மன்னார் —

இந்தியாவுக்கு படகுமூலம் சென்று கொண்டிருந்தவேளை, தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 13 தமிழர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திருகோணமலை திருக்கடலூர் என்னும் இடத்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியவேளை, அவர்களை விசாரணை செய்த நீதிவான் 13 பேரையும் விடுதலை செய்ததுடன், படகோட்டிகள் இருவரையும் தலா 25 ஆயிரம் சரீரப் பிணையிலும் விடுதலை செய்தார். (மோ)

# மன்னார் நகர சபையில் வள்ளுவர் சிலை திறப்பு

மன்னார்—

மன்னார் நகரசபை வளாக முன்றலில் அமைக்கப்பட்ட திருவள்ளுவரின் உருவச் சிலையை நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.வில்வலிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

சுமார் 1 லட்சம் ரூபா செலவில் இந்தச் சிலை அமைக்கப்பட்டது. மன்னார் பிரதேசசபை, நகரசபையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 1 மாதம் பூர்த்தியடைந்த நிலையில் வள்ளுவர் சிலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் செயலக திட்டப்பணிப்பாளர், கணக்காளர், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் பிரதேச செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் அரச, அரசசார்பற்ற திணைக்கள அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (மோ)

# வேளாங்கன்னி ஆலயம் திறப்பு விழா!

மன்னார்—

மன்னார் - களிமோட்டையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட வேளாங்கன்னி ஆலய திறப்புவிழாவும், திருவிழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த விழாவின்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் அருள் பெற்றனர். (மோ)

# பண்பாட்டு விழாவை முன்னிட்டு இலக்கியப் போட்டிகள்!

வவுனியா —

வவுனியா மாவட்ட பண்பாட்டு விழாவை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தால் சிறுகதைகள், வெண்பா, விருத்தம், அகவல் உட்பட, மரபுக்கவிதையும் புதுக்கவிதைப் போட்டிகள் என்பன நடத்தப்படவுள்ளதாக வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் அறிவித்துள்ளார்.

போட்டியாளர்கள் வவுனியா மாவட்டத்தில் வசிப்பவர்களாக இருப்பதுடன் ஆக்கங்கள், சமகாலப் பிரச்சினைகள், சமூகப்பண்பாடு, பண்பாட்டு விழுமியங்கள், இன உணர்வு ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட கலாசார செயலர், அரச அதிபர் அலுவலகம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (கு)

# இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் மக்களின் அவலம் தொடர்வதை அனுமதிக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்

கரவெட்டி —

வட, கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்புகளின் இராணுவக் கட்டுப்பாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அவலம் தொடர்கதையாவதை தமிழ் பேசும் இனம் இனிமேலும் அனுமதிக்க முடியாதென - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்-மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இன அழிப்பின் உச்சக்கட்டமானது இராணுவத்தினரதும், துணை இராணுவக் குழுக்களினதும் வெறியாட்டத்தின் மூலம் எமது நிலம் இரத்தத்தால் நனைக்கப்பட்டுச் செல்வதும், கல்வி, பொருளாதார வளங்கள் சிதைக்கப்படுவதுமான அநாகரிக அரச செயல்கள் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நிலையை சர்வதேசம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதன் நோக்கம் என்ன?

நாளுக்கு நாள் தமிழினத்தைக் கொலை செய்யும் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. நான்கு மாதக் குழந்தையை கூட இரக்கமற்றுக் கொலை செய்யும் கொடூரத்தை எப்படிப் பார்த்துப் பொறுத்திருப்பதென தமிழினம் உள்ளக் குமுறலுடன் உணர்ச்சி பொங்க விழித்திருக்கிறது.

கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், காணாமற் போதல், துன்புறுத்தல் என எமது பிறந்த மண்ணில் ஆக்கிரமிப்புச் சிங்களப் படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் நடக்கும் கொடுமைகளால் நிம்மதியற்ற வாழ்வு வாழ்வது எவ்வளவு காலம்? இளைய தலைமுறைகளை இனங்கண்டு கொடூரமாகக் கொலை செய்தும், வதை செய்யும் படலத்தைத் தொடர விடுவதா?

இராணுவமும், துணை இராணுவக் குழுவினரும் நேரிலே சென்று நடத்தும் இந்த கொடூரச் செயல்களை உடனும் மறுத்துக் கூறும் இராணுவப் பேச்சாளரும், சமாதான செயலக அதிகாரியும், இராணுவ தளபதிகளும் இருக்கும் வரை தமிழின அழிப்பு அதிகரிக்கும்.

இதைத் தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறக் கூடாது. அதற்காகப் பாதுகாப்புள்ள இடங்களுக்கு மாறுவது அவசியம். உயிர்கள் இறந்த பின்னர் நிலமிருந்து என்ன பயன்? இனம் அழிந்த பின்னர் இறைமை வாழ்வு யாருக்கு? இதைத் தமிழ் பேசும் இனம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

புத்தூர் கொலைகள், நெல்லியடி கொலைகள், அல்லைப்பிட்டி கொலைகள், மந்துவில் காணாமல் போனோர் நிலை, நாளாந்தம் கொல்லப்படும் அப்பாவி பொதுமக்கள் இவற்றை நேரில் தமது கட்டுப்பாட்டில் நடத்தி விட்டு மறுகணமே தமக்கும் இந்த நடவடிக்கைகளுக்கும் தொடர்பில்லை என மறுக்கும் இராணுவப் பேச்சாளரின், சமாதான செயலகப் பேச்சாளரின் கபட நாடகத்தைச் சர்வதேச சமூகம் ஏன் தட்டிக் கேட்கவில்லை? போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கடமைகள்கூட தளம்பல்நிலையிலேயே காணப்படுகிறது. இந்த நிலைகள் தொடர்வதைப் பார்த்து பொறுத்திருப்பது எவ்வளவு காலம்?

தமிழ் ஊடகங்கள் அனைத்தும் நாளாந்தம் தமிழினத்தின் துன்ப நிலையை கூறுவதாகவே உள்ளது. குறிப்பாக இளைய தலைமுறையின் கல்விக்கான பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்டுச் சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த காலங்களைவிட உயர்ந்த நிலையில் செயல்படுவது கவனிக்கத்தக்கது.

குறிப்பாக யாழ். குடாநாட்டின் பல்கலைக்கழக மாணவர்களின் துணை கொண்டு சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பு உருவாக்கப்பட்ட பின், ஆயிரக்கணக்கான வறிய மாணவர்கள் பல்கலைக்கழக பட்டப் படிப்பையும், நவீன தொழில்நுட்ப கற்கை நெறிகளையும் பயின்று உயர்ந்த கல்விக்குத் தங்களை வளர்த்துச் செல்வதை விரும்பாத சிங்களப் பேரினவாத அரசு பலதடவைகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையை அழிப்பதற்கு முயன்றது.

ஆனால், அதனைத் திட்டமிட்டு கடந்த வெள்ளி இரவு 11.30 மணியளவில் அலுவலகத்துள் புகுந்த இராணுவத்தினர், துணை இராணுவக் குழுவினருடன் சேர்ந்து குண்டு வைத்துத் தகர்த்து எரியூட்டியமை கடந்த காலத்தில் யாழ். நூலகத்தில் எரியூட்டியதன் பின் நடந்த கல்வி அபிவிருத்தியை தடுக்கும் உயர் நடவடிக்கை இதுவெனத் தமிழினம் உணரும்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனது அலுவலகமும் அழிக்கப்பட்டுள்ளது. இவையும் எமக்கான அச்சுறுத்தலாகவும் மக்களுக்காக சேவை செய்யும் மக்கள் பிரதிநிதிகளின் சேவையைத்தடுப்பதாகவும், மக்கள் பிரதிநிதிகளுக்கான கொலை முயற்சியுமாகவே கருத வேண்டியுள்ளது.

எனவே, பல்வேறு துறைசார் மக்களை - மக்களின் சேவைகளை, மக்கள் பிரதிநிதிகளைத் திட்டமிட்டு அழிப்பதோடு ஏதுமறியாத பச்சிளங் குழந்தையையும் அழிக்கும் கொடூரம் தமிழீழ தேசத்தின் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இனவெறி இராணுவத்தாலும், அவர்களுடன் சேர்ந்த துணை இராணுவக் குழுக்களாலும் நடத்தும் அவலத்தைத் தொடராது தடுக்கச் சர்வதேசம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதன்மூலம் தான் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர முடியும். அவ்வாறில்லாவிடின் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் கூறியது போல - நாம் எமது மண்ணிலும் கடலிலும் சுதந்திரமாக நடமாடும் வரை மாற்றானை சுதந்திரமாக நடமாடவிட முடியாது. இதை இலங்கை அரசும் அரச சமாதானப் பேச்சாளர்களும் இராணுவப் பேச்சாளர்களும் கவனத்தில் எடுக்கத்தவறினாலும் சர்வதேச சமூகம் கவனத்திலெடுக்கத் தவறக் கூடாது.

தமிழர் மீதான படுகொலை தொடரின் இலங்கை அரசே, சமாதான ஒப்பந்தத்தை புறந்தள்ளி, வலிந்துபோரைத் தொடக்கியவர்கள் எனும் நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல் உருவாகுவது தவிர்க்க முடியாதது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : சா.டிசாந்தன்
முகவரி : கல்மடு.




# இராணுவ உழவு இயந்திரம் மோதி இளைஞர் ஒருவர் படுகாயம்

பருத்தித்துறை —

பருத்தித்துறை பகுதியில் இராணுவ உழவு இயந்திரம் மோதி படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த நடராஜசுந்தரம் மயூரன் (வயது26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இராணுவத்தினரின் உழவு இயந்திரமும் இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகி உழவு இயந்திரத்துடன் இழுபட்டுச் சென்று இளைஞர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

அந்தப் பகுதி மக்களால் உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

# மாணவர் கல்வி அபிவிருத்தியை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி அமுலாக்கல் நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவாப் கல்வி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் - கல்வி அபிவிருத்தி செயற்திட்டம், இணைப்பாடவிதான செயற்திட்டம், விசேட செயல் விருத்தி செயற்பாடுகள் போன்ற மூன்று பிரிவின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மெல்லக் கற்போர் மேம்பாடு, பாடசாலை அமைப்பு மேம்பாடு, செயன்முறைக் கற்றல் முயற்சி செயற்பாடு என்பனவும் இணைப்பாட விதான அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் - விளையாட்டுக்கள் மற்றும் சாரணியம் போன்றவையும், விசேட செயல் விருத்திச் செயற்திட்டத்தின் கீழ் - தலைமைத்துவம், மாணவர் ஆளுமை விருத்தி, மாணவ முதல்வர், வகுப்பு முதல்வர், விருத்தி போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த செயற்திட்டத்துக்கென ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் மாணவர்களின் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

சுவாப் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைகளில் ஜூன் மாதத்திலிருந்து இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# வருடாந்த திருவிழா

இளவாலை —

இளவாலை - பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற வுள்ளது.

ஆலய வருடாந்த திருவிழா வழிபாடுகள் இன்று மாலை 5மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் செபமாலையுடன் திருப்பலியும் நடைபெற வுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை பவனியும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு திருவிழா திருப்பலியும் புனிதரின் திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

# கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் —

வலி. தென் மேற்கு பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் கூட்டமாகக் காணப்படுவதால் அந்த வீதிகளூடாகப் போக்குவரத்துச் செய்யும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலை தோன்றியுள்ளது.

வட்டுக்கோட்டை, சங்கானை, சண்டிலிப்பாய், சித்தங்கேணி, சுழிபுரம், அராலி போன்ற இடங்களிலேயே கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

இந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலி. தென் மேற்கு பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் இதுவரை எந்தவிதமான ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாண அகராதி நூல் வெளியீட்டுவிழா - கடந்த 14ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக செந்தமிழ் வந்தனார், இரா.இளங்குமரன், தமிழ்மண் பதிப்பக நிறுவனம் கோ.இளவழகன் மற்றும் தெ.மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த அகராதி சமகால அரசியல் வழக்கிலுள்ள பாரம்பரிய தமிழ் சொற்களின் பிரயோகத்தில் தேவை, புலமை சார் அனுபவங்களைக் கருத்தில் கொண்டு 1842ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட யாழ். அகராதியின் இரண்டாவது பதிப்பாகும்.

60 ஆயிரம் சொற்களுடன் சுமார் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அகராதி இது என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் சிவத்தம்பி, யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராசா, கலாநிதி வண. ஜெபநேசன் பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை பேராசிரியர் வ.மகேஸ்வரன், புரவலர் ஹாசிம் உமர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# இராணுவ கெடுபிடிகளால் மீன் விற்பனை பாதிப்பு


யாழ்ப்பாணம் —

காக்கைதீவு கடற்கரையோர மீன் சந்தைப் பகுதியில் இராணுவ நெருக்கடிகள் அதிகரித்துள்ளமையால் மீன் விற்பனை பாதிப்படைந்துள்ளதாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

காக்கைதீவு கடற்கரையோரப் பிரதேசங்களில் மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவதால் மீனவர்களும் சிரமமின்றி மீன்களை விற்பனை செய்யக் கூடியதாக இருந்தது.

ஆனால், தற்போது காக்கைதீவு இராணுவக் காவலரண் பெரிதாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதோடு அந்தப் பகுதியில் இராணுவம் கடுமையான சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இதனால் மக்கள் காக்கைதீவுப் பிரதேசத்துக்கு மீன் வாங்குவதற்காக வருவதில்லையெனவும், எனவே மீன்கள் விற்பனை செய்யப்படாது தாம் பெரும் நட்டத்துக்குள்ளாகி வருவதாகவும் அந்தப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.





இந்து கலாசார திணைக்களம் சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலய அனுசரணையுடன் நடத்திய திருநாவுக்கரசர் குருபூசை நிகழ்வில் ஆலயப் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ சபா வாசுதேவசர்மா வாழ்த்துரை வழங்குவதையும், அருகில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் மற்றும் சிவயோகராணி ஆகியோரையும், பூசையில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். படங்கள் : (82)

# தமிழினம் வாழவேண்டுமெனில் மொழி காப்பாற்றப்பட வேண்டும்

**கிளிநொச்சி ஜெயபுரம் மகாவித்தியாலயத்துக்கு 31 லட்சம் ரூபா செலவில் தமிழீழ நிதித் துறையினரால் தட்டி அமைக்கப்பட்ட பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தை பாடசாலை நிர்வாகத்திடம் நேற்றுமுன்தினம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி ஆற்றிய உரை**



சாதிகளற்ற, மத வேறுபாடற்ற, நிலத்தால் மாறுபடாத, பெண்ணடிமைத் தன்மை இல்லாத சமூகம் இந்த மண்ணில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்த மண்ணில் இதுவரை செய்யப்பட்டிருக்கிற ஈகம் பெருமதிப்புடையதாக அமையும்.

எங்கள் பிள்ளைகள் கல்வியில் மேம்பாடு அடைய வேண்டும் என்பதில் தேசியத் தலைவர் எப்போதும் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். அதற்காக பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகிறார்.

தேசியத் தலைவ ரின் 50 ஆவது வயது நிறைவையொட்டி எங்களுடைய குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக சில வேலைத் திட்டங்களை செய்யவேண்டும் என்று எண்ணினோம்.

இதை எமது கல்விக் கழகப் பொறுப்பாளரிடம் தெரிவித்தோம். கிளிநொச்சி பாரதிபுரத்தில் உள்ள மகாவித்தியாலயத்தை அவர் தெரிவு செய்தார். அங்குதான் நிறைய தேவை இருப்பதால் புதிய கட்டட வசதியை ஏற்படுத்தலாம் என்று கூறினார். கடந்த ஆண்டு மார்ச்சில் அந்த கட்டடத்தை ஒப்படைத்தோம்.

2005 ஆம் ஆண்டில் இதர கட்டங்களை அமைக்கவேண்டும் என்று நாம் திட்டமிட்ட போதும் ஆளணிப் பற்றாக்குறையால் கட்டடங்களை அமைக்க முடியாமல் போய்விட்டது.

இந்த ஆண்டுதான் கட்டடத்தைக் கட்டி ஒப்படைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

எங்கள் குழந்தைகள் கல்வியில் மேம்பட்டவர்களாக வரவேண்டும். குழந்தை பிறக்கிற போது அஃறிணையாகப் பிறக்கிறது. அதனை அஃறிணைப் பொருளாகப் பார்க்கிறோம். அது உயர்திணைப் பொருளாக மாறுவதற்குச் சிந்திக்கும் ஆற்றல் வளர வேண்டும். அந்த ஆற்றல் வளரும் போது தான் உயர்திணையாகிறது. குழந்தை பிறந்தது என்று சொல்லுவார்கள். ஆக அது அஃறிணைப் பொருள். அது பிறக்கும் போது அதற்குச் சிந்திக்கும் ஆற்றல் இல்லை.

ஆகவே அஃறிணையை உயர்திணையாக்கக் கூடிய கடமையைச் செய்பவர்கள் ஆசிரியர்கள். எங்களுடைய இனம் இன்றைக்கு அழிவின் விளிம்பில் நிற்கக் கூடிய இனமாக இருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து எங்களுடைய இனத்தை அடிமைப்படுத்தி அழிக்கவேண்டும் என்பதற்காக சிங்களப் பேரினவாதம் பல்வேறு நடவடிக்கைகளை இந்த மண்ணில் செய்து வருகிறது.

இலங்கை விடுதலையடைகிற போது - நீர்கொழும்பில் 53 தமிழ்ப் பாடசாலைகள் இருந்தன. இன்றைக்கு விஜயரட்ணம் இந்து மகா வித்தியாலயம் என்ற ஒரே ஒரு பாடசாலை மட்டுமே இருக்கிறது. மற்றைய பாடசாலைகள் எல்லாம் சிங்களப் பாடசாலைகளாகவும் தமிழர்களை தமிழ் பேசும் சிங்களவர்கள் என்றும் பதிவு செய்தனர்.

தமிழ் மூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களை அந்தப் பாடசாலைகளுக்கு நியமிக்காமல் நிறுத்தி சிங்கள ஆசிரியர்களை அமர்த்தினார்கள். சிங்கள மொழியிலே கல்வி கற்பித்துப் படிப்படியாக அங்கே எங்கள் இனமே இல்லாமல் முற்றாக அழித்தொழித்திருக்கிறார்கள்.

நீர்கொழும்பில் இன்றைக்கு சிங்களவர் என்று சொல்லிக் கொண்டு வாழ்கிறவர்கள் யார் என்றால் இலங்கை விடுதலையடைவதற்கு முன்பு தமிழர்களாக இருந்தவர்கள் தான். நீர் கொழும்பில் நடந்தது தான் சிலாபத்திலும் நடந்தது.

இந்தக் கல்விக்கூடாக இனத்தைக்கூட மாற்ற முடியும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மொழி அழிந்து விடுமானால் இனம் மாறிவிடும். உலகத்திலே இப்படி அழிந்து போன இனங்கள் நிறைய உண்டு.

ஆகவே ஆசிரியர் பணி என்பது மிக உயர்ந்த பணி. உங்கள் இனத்தை இனமாகப் பேணக் கூடிய சூழ்நிலையும் வலிமையும் உங்களிடத்தில் உள்ளது.

தமிழ்க் குழந்தைகளை தமிழர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய வலிமை உங்களுக்கு உண்டு.

அவர்களுக்கு அறிவைப் புகட்டி பகுத்தறிவாளர்களாகச் சமூகத்துக்கு உதவக் கூடியவர்களாக மாற்றுவது உங்கள் கைகளில் தான் உண்டு.

பெற்றோர் தங்களது குழந்தைகளை 5 அல்லது 6 வயதில் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். அதன் பின்னர் சமூகத்துக்குரிய மனிதர்களாக அவர்களை மாற்றியமைக்கக் கூடிய கடமையை நீங்கள் தான் செய்கிறீர்கள்.

அந்தக் கடமையைச் செய்யும் உங்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வலிமைக்கேற்றபடி எல்லாவற்றையும் செய்யும்.

வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அறிவியல் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் கள் இல்லை. இந்த நிலையை நீக்க வேண்டும் என்பதற்காகத் தலைவரது பணிப்பிற்கமைய கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பல்வேறு பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களை அமர்த்துகின்றார். இதற்குரிய நிதியையும் இயக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

எங்களுடைய மொழி சீரழிந்து கொண்டிருக்கிறது. மிக வேகமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறது. இந்தச் சீரழிவு எப்படி வந்தது என்று ஆராய வேண்டும். இந்த நிலைமையை மாற்ற வேண்டிய கடமையை ஆசிரியர்கள் செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

தமிழின் சுட்டெழுத்துக்கள் எல்லாம் கப்பலேறிப் போய்விட்டன. அம்மாடு என்றும் இம்மரம் என்றும் எழுதுகின்றனர். பன்மை எழுவாயிலும், ஒருமை பயனிலையிலும் முடிகிறது. இந்தத் தவறு எங்கே நடக்கிறது என்று பார்க்க வேண்டும்.

எங்கள் இனம் இனமாக வாழ வேண்டுமெனில் மொழி காப்பாற்றப் படவேண்டும். மொழிவழிப் போராட்டமாகத்தான் எமது போராட்டம் தொடங்கியது. 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்துக்குப் பின்னால் மொழிவழிப் போராட்டமாகத் தொடங்கிய நமது போராட்டம் இன்றைக்கு விடுதலைப் போராட்டமாகப் பெரிய அளவுக்குப் போர் நடந்து கொண்டிருக்கிறது.

போர்க் காலத்தில் 10 லட்சம் மக்கள் எங்கள் மண்ணிலிருந்து வெளியேறியுள்ளனர். அவர்கள் வாழ்கிற நாட்டில் அந்தந்த நாட்டு மொழிகளிலே அவர்களது பிள்ளைகள் படிப்பிக்கின்றனர். அவர்கள் திரும்புவார்களா? இல்லையா? என்பது தெரியாது. திரும்பி வந்தால் கூட அவர்கள் தமிழர்களாக வரமாட்டார்கள். சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுச் செய்த சதி இது.

தமிழர்களை இந்த மண்ணில் இல்லாது ஒழிக்க வேண்டும் என்பதற்காகச் சிங்களம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறது.

தமிழர்களைச் சிங்களவர்களாக மாற்றுவது, தமிழ்ப் பாடசாலைகளிலே சிங்களத்தைத் திணிப்பது , இனப் படுகொலையூடாக தமிழர்களை அழிப்பது, இராணுவ நடவடிக்கையூடாக மக்களை அச்சுறுத்தி வெளியேற்றுவது என்று பல்வேறு நடவடிக்கைகளைச் சிங்கள அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இவற்றிலிருந்து எல்லாம் இனத்தைக் காப்பாற்றுகின்ற முயற்சியில் ஆசிரியர்களுக்குப் பெரிய பங்கு உள்ளது.

எங்களது குழந்தைகளுக்கு நல்ல முறையில் தேசப்பற்றை ஊட்டி வளருங்கள்.

தமிழ் மொழியை அதனுடைய அழகும், தொன்மையும் கெடாமல் அந்தமொழியைக் கற்பிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

ஒழுக்கம் உள்ள சமூகமாக ஒழுக்கம் உள்ள குழந்தைகளாக வளர்த்தெடுக்க வேண்டியதைச் செய்யுங்கள்.

இந்தப் பாடசாலையில் எல்லாவற்றையும் தமிழில் எழுதி வைத்துள்ளீர்கள். ஒப்பீஸ்என்பதை மட்டும் ஒப்பீஸ் என்று ஆங்கிலத்தில் எழுதி வைத்துள்ளீர்கள்.

இங்கே உள்ளவர்கள் எல்லோரும் தமிழர்கள். பெயரை ஒப்பீஸ் என்று ஆங்கிலத்தில் எழுதுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழில் எழதிவிட்டு ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நம் தாய்மொழிக்கு முதன்மை கொடுப்போம். மற்ற மொழிகளைப் படிக்கக்கூடாது என்று சொல்லவில்லை.

ஆங்கிலத்தை நாம் புறந்தள்ளி விட முடியாது. அறிவியலை நாம் அறிந்து கொள்ளவும் உலகத்தோடு தொடர்பாடல் வைத்துக் கொள்ளவும் ஆங்கிலம் தேவை. அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது.

ஆனால், எங்கள் மொழியை நாம் விட்டால் எங்கள் இனம் படிப்படியாக அழிந்துவிடும்.

தமிழ் நாட்டிலே தமிழ் செத்துக் கொண்டிருக்கிறது. சேர்ந்து வருகிற நான்கைந்து சொற்றொடர்களை எடுத்தால் அதில் ஒன்று அல்லது இரண்டு தமிழ் இருக்கும் மற்றவை எல்லாம் இந்தி அல்லது ஆங்கிலம் அல்லது உருதுச் சொல்லாக இருக்கும். ஆகவே, தமிழ் மொழி ஓரளவுக்குக் காப்பபாற்றப்படுகிற மண் இந்த மண்தான்.

தமிழ் நாட்டிலிருந்து வருகிறவர்களிடம் நாம் இதைத்தான் சொல்லுகிறோம். அங்கே எமது மொழியை நீங்கள் அழியவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று கூறுகிறோம்.

தமிழ் நாட்டில் மொழிப்பற்றுடைய தமிழ் அறிஞர்கள் சிலர் இருக்கின்றனர். அவர்களை நாம் அழைக்கின்றோம், இங்கே வாருங்கள் உண்மையிலே தமிழ் கற்பிப்பதற்கு இங்கே ஆள் பற்றாக்குறை உள்ளது. அது ஒரு பெரிய இடர். இந்த இடரை நீக்க கல்விக் கழகம் ஏற்ற முயற்சிகளை செய்து வருகிறது.

தமிழ் ஆசிரியர்களை உருவாக்குவதற்கென்றே தனியாக ஒரு பாடசாலையை நாங்கள் நடத்துகிறோம்.

ஒரு காலத்தில் தமிழர் என்று சொல்வதற்கு நாம் அச்சப்பட்டோம், வெட்கப்பட்டோம்.

இன்றைய உலகம் முழுவதும் தமிழரது வீரம் பறைசாற்றப்பட்டுள்ளது.

தமிழர் என்றால் வீரம் செறிந்த இனத்தார் என்ற செய்தி, எமது தலைவர் காலத்தில் இந்த மண்ணிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர் என்று சொல்வதற்கு மகிழ்ச்சியடைய வேண்டும். பெருமைப்படலாம் - பெருமைப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய சிந்தனையுடைய குழந்தைகளாக நம் குழந்தைகளை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு.

சாதிகளற்ற , மதவேறுபாடற்ற, நிலத்தால் மாறுபடாத, பெண்ணடிமைத்தன்மை இல்லாத சமூகம் இந்த மண்ணில் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த மண்ணில் இதுவரை செய்யப்பட்டிருக்கிற ஈகம் பெருமதிப்புடையதாக அமையும்.

அந்தக் கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. அந்தக் கடமையை ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறேன்.


பாடசாலைகளிலே படிக்கும் குழந்தைகளே! தேசப்பற்றோடும், இனப்பற்றோடும் படியுங்கள். உங்கள் மொழியை நன்றாகப் படியுங்கள். ஆங்கிலத்தையும் படியுங்கள். ஒழுக்கம் உள்ளவர்களாகவும், அகத்தூய்மை, புறத்தூய்மை உள்ளவர்களாகவும் வாழுங்கள்.

# குருதியில் குளிப்பது எங்களின் விதியா? உலகமே! இதற்கும் மௌனம்தான் பதிலா?



இது
புத்தர் பெருமான் ஞானம் பெற்ற
சித்திரை நாளில் சிறபபுப் பரிசு.
பாவப்பட்ட ஈழத்தமிழருக்கு
பௌத்ததேசம் வழங்கிய விருது.
அன்று
விகாரைகள் தோறும் விளக்குகள் ஒளிர்ந்தன
எங்கள் ஊர்களில் உயிர்கள் அணைந்தன.
பாருங்கள்
எல்லோரும் உற்றுப் பாருங்கள்.
ஈரம் நொதிக்கும் இதயங்களே!
தீர்ப்பு வழங்கவரும் தேசங்களே!
எங்கள் வாழ்வின் அவலத்தை வரைந்து கொள்ளுங்கள்.
ஏதும் அறியாமல்,
ஏன் சாகிறோமென்றும் தெரியாமல்
குருதியில் குளித்துக் கிடக்கிறது ஒரு குடும்பவிருட்சம்.
பிஞ்சை அணைத்தபடி பூவும்,
பூவைப் பிணைந்தபடி காயும்,
தமிழருக்குக் காவலென்பதால் நாயும்,
எரியுண்டு போவதுதான் எமக்கெழுதிய விதியா?

ஈழத்தமிழர் சாகப் பிறந்தவர்களா?
நாயைப் போல வாழப் பிறந்தவர்களா?
அல்லைப்பிட்டி அழுகைக்கானதல்ல
அடக்குமுறை அதிகாரத்துக்கான முடிவுக்கானது.
இரத்தமும், இரத்தமும் பேசும் மொழியில்
புத்த பெருமான் போதிக்கவில்லை
ஆயினும் பேரினவாதம்
அதைத்தானே போதிக்கிறது.
பொறுமையின் அளவு மட்டம் பெரிதானதல்ல
சின்ன உணர்வுத் திரியில் மூளக்கூடியது.
எம்மை மூட்டாதீர்
முளாசியெரிய வைக்காதீர்.
இது ஆற்றாது அழுபவரின் கண்ணீர்
அடக்குமுறைக்குள்ளே கிடப்பவரின் மௌனக்குரல்.
உலகமே!
எமக்குப் பதில் வேண்டும்
இப்போது வாருங்கள்
இல்லையெனில் எப்போதும் வரவேண்டாம்
எதற்காகவும் வரவேண்டாம்.
முடியுமெனில் உங்கள் விழியில் எங்களை எடுங்கள்
இல்லையெனில் எங்கள் வழியில் எங்களை விடுங்கள்.
பாருங்கள் உற்றுப் பாருங்கள்
அந்தச் சின்னப் பிள்ளையின் சிரசிலிருந்து
பென்னம் பெரிய நெருப்பு மூள்கிறது.
தெரிகிறதா?
இது தணியாது
இனிப் பணியாது



உலகமே!
இதற்கும் உன் மௌனம்தான் பதிலா?
மரங்களைத் தறியாதீர் என்பவர்களே!
மிருகங்களை வதையாதீர் என்பவர்களே!
இங்கு பிள்ளைகளைக் கொல்கிறார்களே.
ஏன் கேள்வி எழுப்பவில்லை?
எமக்கான ஆறுதலை ஏன் தரவில்லை?

புதுவை இரத்தினதுரை

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதால் புணர்வு.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# ஒட்டமுடியாத விரிசல்

அரசாங்கம் மற்றும் இராணுவத்தினருடன் இணைந்து கருணாகுழு செயற்படுவதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக் சன் தெரிவித்திருக்கிறார்.

இந்த உண்மையைத்தான் புலிகள் எத்தனையோ தடவைகள் சொல்லிவந்திருக்கிறார்கள். ஆனால், அரசுத்தரப்பு அதை அடியோடு நிராகரித்து வந்திருக்கிறது. அதேபோல போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் கூட அவ்வப்போது முரண்பாடாகவே கருத்து வெளியிட்டு வந்திருக்கிறது.

கருணா குழுவினர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்குவதை கண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் அரச, இராணுவ உதவியுடன் செயற்படுவதற்கு எந்த ஆதாரமும் தம்மிடம் இல்லை என்று தான் கண்காணிப்புக்குழு கூறிவந்தது.

ஆனால், இப்போது முதல் தடவையாக கண்காணிப்புக்குழுத் தூதுவர் உல்ப் ஹென்றிக்சன் கருணா குழு - அரசு, இராணுவத்தரப்புடன் இணைந்து இயங்குவதற்கு தம்மிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாக கூறியிருக்கின்றன.

அதை இவர் ஒரு பத்திரிகைப் பேட்டியில்தான் கூறியிருக்கிறாரே தவிர உரிய ஆவணமாக சர்வதேச சமூகத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை. அப்படி ஒரு ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டால் அது முக்கிய திருப்பமாக அமையும்.

ஆனால், கண்காணிப்புக்குழுவின் அண்மைக்கால கருத்துக்களும், அறிக்கைகளும் முரண்பாடுகள் நிறைந்ததாக இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் தொடர்பாக படையினர் மீது குற்றச்சாட்டை முன்வைத்துவிட்டு - பின்னர் அரச தரப்பின் நெருக்கடிகளால் இந்த அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது.

பின்னர், சண்டே ஒப்சேவர் பத்திரிகைக்குப் பேட்டியளித்த உல்ப் ஹென்றிக்சன் தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றவில்லை என்பது போலவே கருத்து வெளியிட்டிருந்தார். இப்படியான முரண்பாட்டுத் தன்மைகள் தொடர்ந்தும் நீடித்தே வருகின்றன.

அண்மையில் நடந்த கடற்சமர் குறித்து கண்டனம் வெளியிட்ட கண்காணிப்புக்குழு குடாநாட்டில் கொன்று குவிக்கப்படும் அப்பாவி உயிர்கள் குறித்து கவனம் செலுத்தவோ, கண்டனம் செய்யவோ,முனையவில்லை.

கண்காணிப்புக்குழுவும் சரி, சர்வதேச சமூகமும் சரி ஒரு விடயத்தைக் கண்டுகொள்ளவே மறுத்து விடுகின்றன. அதாவது - போரிடுவதற்கென்ற தமது படைகளை தயார்படுத்தி வைத்திருக்கும் புலிகள், அரச படையினர் மத்தியில் ஏற்படும் இழப்புக்கள் தான் போர் நிறுத்த மீறல் என்று கருதுவதாக தெரிகிறது.

ஆயுதம் ஏந்தாத அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொன்று குவிக்கப்படுவதையோ அதற்குக் காரணமானோரை அம்பலப்படுத்தவோ கண்காணிப்புக் குழு தவறுவது அதன் மீதான நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி விட்டிருக்கிறது.

தீவகத்தில் நடந்த கொடூரங்கள் குறித்து கண்காணிப்புக்குழு வாயே திறக்கவில்லை. ஏன்? இந்தச் சம்பவம் குறித்து அன்றிரவே முறைப்பாடு செய்த போதும் அடுத்த நாள் காலை வரை பொலிஸார், கண்காணிப்புக்குழு, செஞ்சிலுவைச்சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு என்று எவருமே சென்று பார்க்கவில்லை.

ஏன் இப்படி ஒரு அவலம். போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளபோது சண்டைகள் ஆங்காங்கே நடக்கிறதுதான். ஆனால், எல்லாமே சில நிமிடங்களோ, இல்லை மணித்தியாலங்களோடு சரி.

அதற்குப் பின்னராவது இவர்கள் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டோரைக் காப்பாற்ற முனையலாமல்லவா? குற்றுயிராகக் கிடப்போரைக் காப்பாற்ற முன்வராதவர்கள் அறிக்கைகளில் மட்டும் வீரம் காட்டுவது ஏன்?

கருணா குழு விவகாரத்திலும் இதேபோன்று தான் அவ்வப்போது கண்காணிப்புக்குழு அறிக்கைகள், பேட்டிகளோடு விட்டுவிடுகிறது.


இன்றைய மோசமான நிலை ஏற்படுவதற்கு கருணா குழுவினரின் நடவடிக்கைகள் தான் காரணம். கருணா குழுவைக் கட்டுப்படுத்த அரசு தவறியதன் விளைவாக நாடே யுத்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இன்று பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் கருணா குழு காரணம். இதை கண்காணிப்புக்குழு முன்னரே தெளிவாகச் சொல்லி சர்வதேச சமூகத்தின் மூலம் அரசு மீது அழுத்தம் கொடுத்திருந்தால் அந்த நெருக்கடி ஏற்பட்டிருக்காதே.

காற்றுள்ளபோதே தூற்றுவதை விட்டு, கண்காணிப்புக்குழு இப்போது கருணா குழுவுக்கும், அரசுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறுவது எந்த உருப்படியான தீர்வுக்கும் வழிசெய்யப்போதில்லை. ஏனெனில், விரிசல்கள் இப்போது ஒட்ட முடியாதளவுக்கு விரிந்து விட்டன.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# 4 மாத குழந்தையின் படுகொலையில் கூட வாய் மூடியுள்ள ஐ.நா நிறுவனங்கள்

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி



யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் 4 மாதக் குழந்தை படுகொலை செய்யப்பட்ட பின்னரும் கூட ஐ.நாவின் சிறார் அமைப்புகள் வாய்மூடி இருப்பது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினிசிதம்பரநாதன் கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது-

வடக்கு - கிழக்கில் மட்டும் கடந்த 3 நாட்களில் மொத்தம் 37 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் 180 தமிழர்களை இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினரும் படுகொலை செய்துள்ளனர்.

அல்லைப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை 4 மாதக் குழந்தையும், 4 வயது சிறுவனும் கடற்படையினராலும், துணை இராணுவக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்டனர்.

சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கில் ஏப்ரல் 25,26 ஆகிய திகதிகளில் விமானப் படை நடத்திய தாக்குதலில் 16 வயதுக்கும் குறைந்த 8 சிறார்கள் படுகொலை செய்யப்பட்டனர். 16 வயதுக்கும் குறைந்த இரு சிறார்கள் அண்மையில் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் படுகொலை செய்யப்பட்டனர்.

கடந்த பல வாரங்களாக தொடர்ச்சியாக சிறார்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்படுவது குறித்து - யுனிசெப் மற்றும் யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஐ.நாவின் சிறார் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

சிறார் படைச் சேர்ப்பு குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்த அமைப்புகளும் சர்வதேச அமைப்புகளும் வழமைக்கு மாறாகக் குரல் எழுப்புகின்ற போதும் தமிழ்ச் சிறார்களையும், குழந்தைகளையும் அரசாங்கம் படுகொலை செய்கிற போது ஏன் அமைதியாக இருக்கின்றனர் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியாக தடைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு—

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற விடுதலைப்புலிகள் அமைப்பை சர்வதேச ரீதியில் உடனடியாக தடை செய்ய வேண்டுமெனவும், புலிகளை சர்வதேச சமுகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமெனவும் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உருமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க கருத்து தெரிவிக்கையில் - கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் செயற்பாடுகளை, பயணங்களை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் புலிகளுக்கு கிடையாது. அத்துடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் புலிகள் கடல்வழி மற்றும் வான் வழியில் பயணம் செய்வதற்கு அனுமதி கிடையாது. புலிகளின் அச்சுறுத்தலுக்கு பயந்து கண்காணிப்பு பணியிலிருந்து விலகாது தொடர்ந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு புலிகளால் மீறப்படுகின்ற யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து சர்வதேச சமூகத் துக்கு கண்காணிப்புக்குழு எடுத்துரைக்க வேண்டும்.

புலிகளின் செயற்பாடுகளை கை கட்டி வேடிக்கை பார்ப்பதை விடவும் புலிகளை சர்வதேச சமுகத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பேச்சுவார்த்தை மேசைக்கு செல்வதற்கான அழுத்தத்தை தொடர்ச்சியாக கொடுக்க வேண்டும்.

அண்மையில் வெற்றிலைக் கேணிப் பகுதி கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த கடற்படையினரை இலக்கு வைத்து புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது அப்பட்டமான யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும்.

இந்தவிடயம் குறித்து உடனடியாக சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்து புலிகளின் செயற்பாடுகளுக்கு தடை விதிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# மனித உரிமை ஆணைக்குழு தீவகப் பகுதிக்கு விஜயம்!

யாழ்ப்பாணம்—

தீவகத்தில் 13 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட இடங்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்று விஜயம் செய்தனர்.

கடந்த 13ஆம் திகதி தீவகத்தில் அல்லைப்பிட்டி மற்றும் புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13 அப்பாவி பொதுமக்கள் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் பிரதேசங்களுக்கு நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினர் விஜயம் செய்து படுகொலை நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ரோகித பிரியதர்சன, புலன்விசாரணை அதிகாரி சுவேந்திரராஜா, சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆகியோர் அங்கு விஜயம் செய்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அதிகரிக்கும் வன்முறைகளால் சிறுவர்கள் பெரும்பாதிப்பு!

## யுனிசெப் கண்டனம்

கொழும்பு—

அதிகரித்து வரும் வன்முறைகள் காரணமாக வடக்கு-கிழக்கில் வாழும் சிறுவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக யுனிசெவ் தெரிவித்துள்ளது.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில்அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் காரணமாக ஆறு சிறுவர்கள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தும் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.

இதையடுத்து தமது சொந்த இடங்களை விட்டு ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இடம்பெயர்ந்து தற்போது பொது இடங்களில் தங்கியுள்ளனர். இதே போன்று யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டங்களில் வன்முறைகள் காரணமாக ஒன்பது சிறுவர்கள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்துள்ளனர்.

இதைவிட, வன்முறை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்திருப்பதால் வடக்கு-கிழக்கில் பல பாடசாலைகள் இயங்கவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் வன்முறைகளை கைவிட்டு- உடன் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப வேண்டும் என யுனிசெவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் இன்று மௌனப் போராட்டம்

கிளிநொச்சி—

வடக்கு-கிழக்கில் பொதுமக்கள், பெண்கள், சிறார்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து இன்று கிளிநொச்சி ஐ.நா. வதிவடப் பிரதிநிதியின் பணிமனை முன்பாக சர்வ மதத்தலைவர்கள் மௌனப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத்தலைவர்கள் இந்த மௌனப் போராட்டத்தில்கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை 8.30 மணி தொடக்கம் இரண்டு மணிவரை மௌனப் போராட்டம் நடைபெறும்.

தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைகளை நிறுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும்- ஐ.நா.செயலாளர் நேரடியாக தலையிட்டு அரசு புரியும் படுகொலைகளை தடுக்கக் கோரியும் இந்த மௌனப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக வன்னி பிரதேச மதத்தலைவர்கள் தெரிவித்தனர்.

# 3 பொதுமக்கள், 2 படையினர் தாக்குதல்களில் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

மாகியப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இருவேறு கைக்குண்டுத் தாக்குதல்களில் இரு படையினர் காயமுற்றதாக பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நேற்று முன்தினம் மாலை கொக்குவில் - குளப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தேவநந்தினி சிவநேசன் (வயது 26) என்ற யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மூன்றாம் வருட மாணவி காயமுற்றார்.

அதேவேளை - முத்திரைச் சந்தியில் நேற்று நண்பகல் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலையடுத்து இரண்டு பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

மாணிக்கம் இரத்தினம் (வயது 73), போல் தேவராணி (வயது 55) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் காயமுற்றவர்களாவர்.

## வவுனியாவில்....

சேமமடுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த கிளைமோர் தாக்குதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்பு...

இருப்பதாக தெரிவித்தது.

இந்த நிலையில் நேற்று கூடிய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது முடிவில் மாற்றமில்லையென அறிவித்தனர்.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் சமர்ப்பிக்கும் யோசனைகள் இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுமாக இருந்தால் - தமது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யலாமென போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார். (01)

## மீண்டும் யுத்தம்...

பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலை பயங்கரமான நிலைக்குச் செல்லும் என்பதை நாம் பொருட்படுத்தாது இலங்கை அரசுக்கு உதவிகளை வழங்குவது எமது தேவையாகும்.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என நாம் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறு யுத்தம் ஏற்படுமானால் அது பாரிய அழிவுகளை ஏற்படுத்தும். இவ்வாறான யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க வேண்டுமென நினைத்தால் அனைத்து தரப்பினரும் முயற்சிகளை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

## படுகொலைகளை...

இந்தப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு சர்வதேச சமூகத்தின் மௌனத்துக்கு எதிராகவும், படுகொலைகளைக் கண்டித்தும் கண்டனக்குரல்களை எழுப்பினர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி பொது மைதானத்தில் ஆரம்பித்த கண்டனப்பேரணி கணேசபுரத்திலுள்ள யுனிசெப் அலுவலகத்தை சென்றடைந்ததும் அங்கு மாபெரும் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் கிளிநொச்சி மாவட்ட இணையத்தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்.

இதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவநேசன்- கிளிநொச்சி மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, ஐ. நா பொதுச் செயலாளர் ஆகியோருக்கான மகஜரை யுனிசெப் பிரதிநிதியிடம் கையளித்தார்.

இந்தப்பேரணியில் கிளிநொச்சி நகரிலுள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கண்டனக்குரல்களை எழுப்பினர்.

# புலிகள் வழங்கிய காலஅவகாசத்தை மகிந்த ராஜபக்ஷ தவறவிட்டு விட்டார்

## தளபதி கேணல் பால்ராஜ்



கிளிநொச்சி—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேசியத் தலைவர் பிரபாகரன் வழங்கிய குறுகிய காலஅவகாசத்தை அவர் பயன்படுத்தத் தவறிவிட்டதாக கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

லெப்.கேணல் நவத்தின் 17ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைய சூழலைப் பொறுத்தவரை நான்காம்கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபோது - தான் யதார்த்தவாதி என்று கூறியமையால் அவருக்கான சந்தர்ப்பத்தை வழங்கினோம். ஆனால், அதனை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை. பிறேமதாஸ ஆட்சிக் காலத்திலும் இதே போன்ற படுகொலைகள் கண்மூடித்தனமாக நடைபெற்றன.

ஏதுமறியாத பிஞ்சுகள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். நாங்கள் இன்று சமபலத்துடன் இருக்கிறோம். இனிவரும் நாட்களில் அனைவரும் வயது வேறுபாடின்றி ஆயுதமேந்திப் போராடவேண்டிய ஒரு இறுதிக் காலத்துக்குள் வந்துவிட்டோம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை நாங்கள் நிச்சயமாக வெல்வோம். பல இராணுவத் தளபதிகள் வந்து வந்து போகிறார்கள். ஆனால், எமது மரபுவழி ராணுவத்துக்கு தமிழீழ தேசியத் தலைவர் தான் தலைவராக உள்ளார்.

அவருடைய காலத்தில் எமக்கான விடுதலை நிச்சயமாகக் கிடைக்கும். நாங்கள் அனைவரும் மூன்று மடங்குகளாக உழைக்கவேண்டிய காலமாகவும், தற்பாதுகாப்புக்காக ஆயுதமேந்தவேண்டிய காலமாகவும் இந்தக் காலம் உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கடமைக்கு திரும்புமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்—

அரசதுறையில் பணிபுரியும் ஊழியர்கள் நாளை முதல் கட்டாயமாக தமது பணிக்குத் திரும்புமாறு யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

## முகமாலையில் பொறியியலாளர் கைது!

கொழும்பு—

முகமாலைப் பகுதியில் நேற்று இரண்டு கைக்குண்டுகளுடன் பொறியியலாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் பொறியியலாளர் பயணம் செய்த வாகனத்தை சோதனையிட்டபோது இரண்டு கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து பத்மநாதன் கிரிதரன் (வயது 54) என்ற சந்தேக நபர் கொடிகாமம் பொலிஸாரிடம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## படுகொலைகளை...

சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கேட்டுக் கொண்ட போதும் படுகொலைகள் நிறுத்தப்படவில்லை.

இந்த நிலையிலேயே இயலாமையின் உச்சக்கட்டமாகவும் படுகொலைகள் அதிகரித்து வருகின்றமையாலும் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளோம்எனவும்ஆயர்கள் தமது வேண்டுகோளில்தெரிவித்துள்ளனர்.

## சங்கானையில்...

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. அதேவேளை - இந்தச் சம்பவத்தில் இரு படையினர் காயமுற்றதாகக் கூறப்பட்டபோதும் அந்தத் தகவலை படைத்தரப்பு உறுதிப்படுத்தவில்லை. (48)

## நாகர்கோவில்...

பகுதியிலிருந்து படையினர் கடும் ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆட்லறித் தாக்குதல்கள் நீடித்தன.

இதையடுத்து செம்பியன்பற்று, மாமுனை, குடாரப்பு பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறையிட்டதுடன், தாக்குதல் தொடருமானால் கடும் பதிலடியில் இறங்க நேரிடும் என எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போர்....

இதேவேளை - அரச ஊடகங்களில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் பதவி விலக வேண்டும் என்ற செய்தியைப் பிரசுரித்த இணையத்தளம் எமது அமைப்பின் இணையத்தளம் அல்ல. சமாதான செயலக இணையத்தளமே எமது செய்திகளைப் பிரசுரித்து வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சுதந்திர ஊடக அமைப்பு, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் ஊடக அமைப்பு, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# அல்லைப்பிட்டி தேவாலயத்தில் 250 குடும்பங்கள் தஞ்சம்!

## அரச அதிபர் நேரில் பார்வை

யாழ்ப்பாணம்—

அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களின் நலன் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் பேசவுள்ளதாக யாழ் .மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலையை கண்டு அச்சமடைந்து சுமார் 250 குடும்பங்கள் அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயத்தில் தங்கியுள்ளனர். இவர்களை நேற்று யாழ். மாவட்ட அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார்.

தமது கிராமத்தில் தமக்கு குடியிருக்க அச்சநிலை தோன்றியதன் காரணமாக தாம் மேற்படி தேவாலயத்தில் தங்கியிருப்பதாகவும், ஆண்கள் மட்டுமே பகல் வேளைகளில் தமது வீடுகளுக்கு சென்று வருவதாகவும் அரச அதிபரிடம் மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையுடனும், பாதுகாப்பு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு பேசுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதே வேளை மேற்படி ஆலயத்திலுள்ள மக்களுக்கு சமைத்த உணவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவதுடன் ,அவர்களின் பாதுகாப்பு கருதி சில அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் மேற்படி ஆலயத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கிளைமோர்; இரண்டு படையினர் காயம்!

வவுனியா—

வவுனியா - பம்பைமடுவில் நேற்று மாலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

வவுனியா - மன்னார் வீதியிலுள்ள 11 ஆவது மைல்கல் பகுதியில் இராணுவத்தினருக்கான உணவுப் பொருட்களைக் கொண்டு சென்ற ட்ரக் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இரண்டு படையினர் காயமுற்றனர்.

## விசேட தகவல் நிலையம்

கொழும்பு—

தேசிய பாதுகாப்புத் தொடர்பான அனைத்து செய்திகளையும் ஊடகங்களுக்கு வழங்கும் நிலையம் ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

தேசியபாதுகாப்புத் தொடர்பாக முரண்பட்ட செய்திகள் வெளியிடப்படுவதால் சில அமைப்புகள் நன்மையடையும் நிலை உருவாகி உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதனைக்கருத்தில் கொண்டு பாதுகாப்பு விடயங்கள் குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய சகல வசதிகளை கொண்ட நிலையம் ஒன்றை எதிர்வரும் சில தினங்களுக்குள் அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இந்த நிலையத்துடன் 24 மணிநேரமும் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (01)

## கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்; வவுனியாவில் ஒத்திவைப்பு!

கொழும்பு—

வவுனியாவில் அமைந்துள்ள 2 உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தப்படவிருந்த தேர்தல்கள் நான்கு மாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது. தேர்தல் திணைக்களம் இதற்கான தீர்மானத்தை நேற்று எடுத்துள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பி.சுமணஶ்ரீ தெரிவித்தார்.

வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபை ஆகியவற்றுக்கான தேர்தல்களே பிற்போடப்பட்டுள்ளன. தற்போதைய பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும்,மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி நகரசபை, கோரளைப்பற்று மேற்கு பிரதேசசபை, ஏறாவூர் நகர பிரதேசசபை, அம்பாறையில் கல்முனை மாநகரசபை, நாவிதன்வெளி, பொத்துவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் திட்டமிட்டபடி எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - கிழக்கு உட்பட தேர்தல் நடைபெறவுள்ள ஏனைய 20 இடங்களிலும் தேர்தல் பிரசாரப் பணிகள் இன்று நள்ளிரவுடன் முடிவடையவுள்ளன.

11 இலட்சத்து 4 ஆயிரத்து 20 பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் நாளை பிற்பகல் 2 மணி முதல் மூடப்படவுள்ளன (01)

இப்பத்திரிகை இல.26?, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.